# மகம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ மகம் சக்தி**

பராபரம், அநாமய நிராதரமகோசரம்,

பரம தந்திரம், விசித்திரம்

**3. திருப்பாவைபாசுரம் – 5 மகம் இயல்பு**

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை

தூய பெருநீர் யமுனைத் துறைவனை

ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்

தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்

தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்

போய பிழையும் புகுதருவான் நின்றனவும்

தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/XbWCgWqkARs**

**விளக்கம் :**

மாயன் முதல் வார்த்தையே மகம் ஆகும். ஏனென்றால் மாயன் விசித்திரமானவன். பரமதந்திரமானவன் இதைத்தான் மகமும் உலகிற்கு அறிவிக்கிறது. விசித்திரமும், தந்திரமும் ஒருங்கே அமையப் பெற்ற தூய

பெருநீர் யமுனை துறைவனே இங்கு மகம் என்கிறோம்.

ஏனென்றால் பெருநீர் கங்கை ஆகும். அதே நேரத்தில் தூய பெருநீர் யமுனை ஆகும். இந்த விசித்திரத்தை அணிவிளக்காக மகம் நக்ஷத்ரம் உலகத்திற்கு பாரம்பரியமாக எடுத்து இயங்குகிறது.

தாய் அனாமய நிராதர மகோசரம் என்ற வகையிலே தாயுள்ளத்துடன் மன்னிக்கும் மாண்பு தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரனுக்கே உண்டு. எனவே மகத்தின் அருகே வந்து தூவி தொழுது சரணாகதி அடைந்து, தவறை உணர்ந்து வாயினால் பாடி, மனதில் சிந்திக்க பிழைகள் தூசாகும். எனவே இந்த மகம் நக்ஷத்ரம் தாயுள்ளம் கொண்டு பிழைகளை பொறுத்தருள வேண்டும் என்று செப்பேலோர் காக்கப்படுவர்.

இங்கும், அங்கும், எங்கும் தன் தரிசனம் தரும் மாயனாக தந்திர நாயகன், விசித்திர தலைவன் மகம் நக்ஷத்ரமாகும்.

மகத்தை அண்டி தூயோமாய் வந்து, நாம் தூமலர் தூவித்தொழுது நாவினால் பாடி மனதினால் சிந்திக்க நாம் முன்பு செய்த பாவங்களும், இனி நமையறியாது நாம் சேர்த்துக் கொள்ளும் பாவங்களும் யாகத்தீயிலிட்ட நெய்யில் தூசாகும். மகத்தினுடைய சேர்க்கையால் மற்றவர்களுக்கு பாவம் தொலையும்.

முன்பு செய்த பாவங்களும் தொலைந்து போகும். அதற்குரிய பரிகாரங்களும், தண்டனைகளும் மகம் எதிர்கொள்ளும் விசித்திரமான

முறையில் பாவ விமோசனங்கள் கைகூடும். மகத்தினுடைய நிலைப்பாடும் சொல்லாட்சியும், செல்வாக்கும் தந்திரமாக வெற்றி கொடுக்கும். எனவே மகமே வருக! மகமே அருள்க!

## 4. வேதத்தில் மகம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மஹா அனகாய வித்மஹே
பித்ரிய தேவாய தீமஹி
வித்மய லோகம் தீமஹி
தன்னோமகாஃ ப்ரசோதயாத்

தாயுள்ளம் உன் தனிக்கருணை
தன்னிகரில்லா தந்திரங்கள்
பணிவோர் தமக்கு துணையாகும்
பாமரர் துணையே நமோ நமோ

விசித்திரமாக வினைபுரியும்
விளையும் தூய்மை ஆச்சரியம்
சரணடைந்தோர்க்கு கைகொடுக்கும்
சர்வ இன்பமே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5.மகம் கவிதை

மதுரம், மதுரம் கீதசுதம் – மகமே அகமே
ராதே ச்யாமா கீதசுகம் – அகமே மகமே
மதுரம் மதுரம் ஆனந்தம் – மக்கள் மகமே
அநாத பாபா கீதசுதம் – மந்திர மகமே

ஜெகமாளும் மகமே இகத்திலே பரம் காண்பாய்
பராபரமே, ஆலமரமே, கலைதரமே, தலை திறமே
திக்கற்றவர்க்கு துணையே, ஆதியிலா ஆதரவே
அநாமய உருவே, அன்னைச் சரமே, அன்பமுதே

கேட்பவர்க்கு கேட்டதை கொடுக்கும் மகாசக்தி
கேளாதவர்க்கு இலக்கை அடுக்கும் மகா முக்தி
கெட்டவருக்கும் கொட்டம் அழிக்கும் மகாயுக்தி
தொட்டவருக்கும் பட்டம் அளிக்கும் மகாபக்தி

சித்திரமும் கைபழக்கம்; நினதெல்லாம் விசித்திரமே
உத்திரமும் மன பழக்கம்; நினதுலகோ பத்திரமே
எத்திறமும் உன் பழக்கம் எனவே நின் ஆணவமே
பராபரமும் வழிவழியாய் மாறாது காலம் மாற்றிடுமே

பிறவிப் பயனால் சந்திக்கும் சோதனைகள்
பிறந்த மயனால் சேர்ந்திடுமே சாதனைகள்
கறந்த பாலிலும் குறைகாணும் எதிரிகள்
மறந்தும் வாட்டுவர் மக்களையும் வாட்டுவரே

தந்திரமோ, மந்திரமோ, விசித்திரமோ தலைமை நீயே
வந்திடுமோ, சென்றிடுமோ அலைகள் கரையில் நீயே
காலத்தால் காலத்தை கண்டிடவே கரைவாய் நீயே
கோலத்தால் சூலத்தை காட்டியே ஆள்வாய் நீயே

## 6. அபிராமி அந்தாதியில் மகம் சக்தி

### நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம் அன்ன

மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விட அரவின்

பைக்கே அணிவது பண்மணிக்கோவையும் பட்டும்; எட்டுத்

திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே!

### வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும், பனிமுறுவல்

தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்

துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முலையாள்

அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே

### கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உன் தன் அடித்தாமரைகள் உண்டு; அந்தகன்பால்

மீளுகைக்கு உன் தன் விழியின் கடைஉண்டு; மேல் இவற்றின்

மூளுகைக்கு என்குறை; நின்குறையே அன்று; முப்புரங்கள்

மாளுகைக்கு அம்பு தொடுத்த வில்லான் பங்கில் வாள்நுதலே!

### பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்

பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்

காணதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு

பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் மகம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் அஸோகாய நம | – சோகமில்லா சுகமே போற்றி |
| ஓம் தாரணாய நம | – சம்சார சாஹர தோணியே போற்றி |
| ஓம் தாராய நம | – பிறப்பு, வளர்ப்பு, இறப்பிலே நலம் நீக்கி தயவு சேர்ப்பவளே போற்றி |
| ஓம் ஸூராய நம | – தர்ம, அதர்ம, காம, மோட்சம் அருள்பவளே போற்றி |
| ஓம் ஸௌரயே நம | – கண்ணாளனைப் போல் ஒரு கன்னியே போற்றி |
| ஓம் ஜநேஸ்வராய நம | – ஜனங்களின் ஈஸ்வரியே போற்றி |
| ஓம் அநுகூலாய நம | – அனைவர்க்குமான அனுகூல ஆலே போற்றி |
| ஓம் ஸதாவர்த்தாய நம | – அநேக அவதாரம் எடுப்பவளே போற்றி |
| ஓம் பத்மிநே நம | – பத்ம நயனதீட்சையே போற்றி |
| ஓம் பத்மநிபேக்ஷணாய நம | – பத்ம இதய பண்பினளே போற்றி |
| ஓம் பத்மநாபாய நம | – பத்ம அருள் பாலிப்பவளே போற்றி |
| ஓம் அரவிந்தாக்ஷய நம | – தாமரை மலர்ந்து தயவளிப்பவளே போற்றி |
| ஓம் பத்மகர்ப்பாய நம | – இதயத் தாமரை அருளே போற்றி |
| ஓம் ஸரீரப்ருதே நம | – உடல் நலங்காக்க அன்னதான பிரபுவே போற்றி |
| ஓம் மஹர்த்தயே நம | – அளவிலா செல்வ செழிப்பே போற்றி |
| ஓம் ருத்தாய நம | – அனுபவிக்கும் ஆல்போல் அரசே போற்றி |
| ஓம் வ்ருத்தாத்மநே நம | – தொன்றுதொட்டு வளரும் அட்சயமே போற்றி |
| ஓம் மஹாக்ஷய நம | – ஆயிரம் கண்ணுடையாளே போற்றி |
| ஓம் கருடத்வஜாய நம | – கருடக்கொடி உடையவளே போற்றி |
| ஓம் அதுலாய நம | – ஒப்பில்லா ஒய்யாரமே போற்றி |
| ஓம் ஸரபாய நம | – விசித்திரமான பிறப்பே போற்றி |
| ஓம் பீமாய நம | – எவர்க்கும் பய பக்தி அருள்பவளே போற்றி |
| ஓம் ஸமயஜ்ஞாய நம | – கால நேரங்கண்டு தந்திரமளிப்பவளே போற்றி |
| ஓம் ஹவிர்ஹரயே நம | – பாவங்கள் பொசுங்கிட யாகம் அருள்பவளே போற்றி |

ஓம் ஸர்வலக்ஷண லக்ஷண்யாய நம – சர்வ லக்ஷணங்கள் கொண்ட அழகே போற்றி

| | |
|---|---|
| ஓம் லக்ஷ்மீவதே நம | – மகாலட்சுமியின் அருளே அன்பே போற்றி |
| ஓம் ஸமிதிஞ்ஜயாய நம | – அழிவில்லாத பரம தந்திரமே போற்றி |
| ஓம் விக்ஷராய நம | – போர் என்றால் வெற்றியே போற்றி |
| ஓம் ரோஹிதாய நம | – மீனாகவும் மாறி மானுடம் காப்பவளே போற்றி |
| ஓம் மார்காயக் நம | – தலை சிறந்த மோக்ஷ மார்க்கமே போற்றி |
| ஓம் ஹேதவே நம | – அறிவுக்கு கருவூலமே போற்றி |
| ஓம் தாமோதராய நம | – கண்ணியம் கட்டுப்பாடு காப்பவளே போற்றி |
| ஓம் ஸஹாய நம | – அனைவருக்கும் நிழலே நீதியே போற்றி |
| ஓம் மஹீதராய நம | – உலகையே உதகையாக்கும் உத்தமியே போற்றி |
| ஓம் மஹாபாகாய நம | – இகலோக போகமளிப்பவளே போற்றி |
| ஓம் வேகவதே நம | – வேகமும், விவேகமும் நீயே போற்றி |
| ஓம் அமிதாஸநாய நம | – மரணமில்லா இருக்கையே போற்றி |

## 8. லலிதா ஸஹஸ்ரநாமத்தில் மகம் சக்தி

மஹாபோகாமஹைச்வர்யாமஹாவீர்யாமஹாபாலா
மஹாபுத்திர் – மஹாஸித்திர் – மஹாயோகீச்வரேச்வரீ

மஹாதந்த்ராமஹாமந்த்ராமஹாயந்த்ராமஹாஸநா
மஹாயாக – க்ரமாராத்யாமஹாபைரவ – பூஜிதா

மஹேஸ்வர – மஹாகல்ப – மஹாதாண்டவ – ஸாக்ஷினி
மஹாகாமேச – மஹக்ஷீமஹாத்ரிபுரஸ⁶ந்தரீ

சதுஷ்ஷஷ்ட் – யுபசாராட்யாசதுஷ்ஷஷ்டி – கலாமயீ
மஹாசதுஷ்ஷஷ்டிகோடி – யோகினீ – கணஸேவிதா

மனுவித்யாசந்த்ரவித்யாசந்த்ரமண்டல – மத்யகா
சாருரூபசாருஹாஸாசாருசந்த்ர – கலாதரா

சராசர – ஜகந்நாதாசக்ரராஜ – நிகேதநா
பார்வதீ பத்மநயநாபத்மராக – ஸமப்ரபா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் மகம் சக்தி

என்னில் உன்னைக் காண எனக்கு வரமருள்வாய்

சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்

இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்

இந்த்ரிய மடக்கி இருந்து மறிகிலேன் நான்

மனத்தை அடக்க வழிவொன்று மறிந்திலேன் நான்

ஸ்கந்தா உன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே

சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்

காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்

சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்

நினைப்பெல்லாம் நின்னையே நினைத்திடச் செய்திடுவாய்

திருமுருகா உன்னைத் திடமுற நினைத்திடவே

திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே

திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்

நிலைபெறச் செய்திடுவாய் நித்யானந்தமதில்

நித்யானந்தமே நின்னரு வாகையினால்

அத்வைதானந்தத்தில் இமைப்பொழுது ஆழ்ந்திடுவாய்

ஞான பண்டிதா நான்மறை வித்தகா கேள்

ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா கேள்

மெய்ப்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச்செய்

வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்

தாரித் திரயாங்களையுன் தடி கொண்டு விரட்டிடுவாய்

துக்கங்கள் அனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்

பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்

இன்ப துன்பத்தை இரு விழியால் விரட்டிடுவாய்

ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்

அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா

மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி மகம் சக்தி

வடிவும் தனமும் மனமும் குணமும்

குடியும் குலமும் குடிபோ கியவா

அடி அந்தம் இலா அயில் வேல் அரசே

மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே.(19)

அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்

உரிதா உபதேசம் உணர்த்தியவா

விரிதாரண, விக்ரம வேள், இமையோர்

புரிதாரக, நாக புரந்தரனே.(20)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

## 11. ராகங்களில் மகம் சக்தி

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| மராரஞ்சனி | சாருகேசி | சாருகேசி | சரசாங்கி |

## 12. மூலமந்திரம்

ஓம், ஐம், ஹ்ரீம், ஸ்ரீம், க்லிம், சௌம்

ஆதிபராசக்தயேநமஹ

## 13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
| --- | --- | --- | --- |
| ஆல் | முத்திலா | இலுப்பை | பவளமல்லி |

## 14. பரிகாரம்

- அமாவாசையில் அன்னதானம் செய்யவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு மகாலிங்கேஸ்வரர் திருக்கோயில்,** விராலிப்பட்டி – திண்டுக்கல்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை – 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra